


பெரம்பலூர்,மேட்டுப்பாளையம் ஊராட்சி தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் விஜய்மார்ட்டின் என்பவர் கடந்த மாதம் நடந்த சாலை விபத்தில் இரண்டு கால்களையும் இழந்து சிறுவாச்சூர் தனலெட்சுமி சீனிவாசன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். கழகத் துணை பொதுச்செயலாளர் ஆ.இராசா. எம்.பி. மருத்துவமனைக்கு நேரில் சென்று சந்தித்து ஆறுதல் கூறினார். அப்போது, மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ., வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், தழுதாழை பாஸ்கர், து.ஆதவன், டி.ஆர்.சிவசங்கர், எம்.மணிவாசகம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கோவை மாவட்ட தி.மு.க. பாரம் தூக்கும் தொழிலாளர் முன்னேற்ற சங்க பொள்ளாச்சி ராஜாமில் ரோடு பச்சை துண்டு கிளையில் பணிபுரியும் காசி என்பவர் மகன் கே.விருமாண்டி (23) என்கிற தொழிலாளி அகால மரணமடைந்து விட்டார். அவரது குடும்பத்திற்கு நகர தலைமை சங்கத்தின் சார்பில் கொளரவத் தலைவரும் கழக சட்ட திட்ட திருத்தக்குழு உறுப்பினருமான தென்றல் செல்வராஜ், தலைவர் இஎஸ்.எம். சிராஜுதீன் ஆகியோர் நிதியுதவி வழங்கினர். இதில் நகர, தொழிற்சங்க நிர்வாகிகள் நகர்மன்ற உறுப்பினர் நாச்சிமுத்து, உதயகுமார், பாப்பையன் மணி, ஆர்.எஸ். காஜாமைதீன்,வேணுகோபால் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சென்னையில் மழை : நிவாரணப் பணிகள் - மாநகராட்சி அறிவிப்பு!

சென்னை, அக்.27-

சென்னையில் பருவமழை பாதிப்புகளை சரிசெய்ய 22,000 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது. மாநகராட்சி அலுவலர்கள், பொறியாளர்கள், பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள் உள்பட 22,000 பேர் களத்தில் உள்ளனர். பல்வேறு திறன் கொண்ட 1,436 மோட்டார் பம்புகள், 500 டிராக்டர்கள், 478 வாகனங்கள் மற்றும் எந்திரங்கள் தயார் நிலையில் உள்ளது.

வடகிழக்கு பருவமழை தொடங்கி, தமிழ்நாடு முழுவதிலும் பரவலாக மழை பெய்து வருகிறது. இந்த பருவமழை காரணமாக மக்கள் வாழும் பள்ளமான பகுதிகளில் தேங்கும் மழைநீரால் பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரடியாகவும் காணொலி காட்சி வாயிலாகவும் அரசின் உயர் அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சி தலைவர்கள், காவல்துறை அதிகாரிகள் ஆகியோருடன் ஆய்வுக் கூட்டங்களை நடத்தி தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தி வருகிறார். அந்தவகையில் முதல்வர், துணை முதல்வர் மற்றும் அமைச்சர்கள் மழைநீர் சூழும் இடங்களை பார்வையிட்டு அதிகாரிகளுக்கு அறிவுரைகளை வழங்கி வருகின்றனர்.

வடகிழக்கு பருவமழை தொடங்கி கடந்த 17ம் தேதி 179.80 மி.மீ. மழை பெய்துள்ளது. அதேபோல், 23ம் தேதி சராசரியாக 17.94 மி.மீ. மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக மேடவாக்கத்தில் 93.30 மி.மீ. மழை பெய்துள்ளது. மழைநீர் சூழ்ந்து பாதிக்கப்படும் பகுதிகளில் உள்ள மக்களுக்கு தேவையான உதவிகளை அளித்திடும் நோக்கில் வெள்ள நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சென்னையை பொறுத்தவரை மாநகராட்சி சார்பில் 215 இடங்களில் நிவாரண மையங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இந்த மையங்களில் உணவு சுகாதார வசதி, குடிநீர் வசதி முதலியவை செய்யப்பட்டுள்ளன. நிவாரண மையங்களுக்கு உணவு வழங்க ஏதுவாக 106 சமையல் கூடங்கள் அமைக்கப்பட்டு தயார்நிலையில் உள்ளன.

தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு கடந்த 22 மற்றும் 23ம் தேதி 1,48,450 பேருக்கு காலை உணவும், 2,23,950 பேருக்கு மதிய உணவும் 28,000 பேருக்கு இரவு உணவும் என மொத்தம் 4 லட்சத்து 400 பேருக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது. மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீரை வெளியேற்றும் வகையில் பல்வேறு திறன் கொண்ட 1,436 மோட்டார் பம்புகள் தயார் நிலையில் உள்ளன.

150 எண்ணிக்கையில் 100 குதிரை திறன் கொண்ட மோட்டார் பம்புகள் தயார் நிலையில் உள்ளன. டிராக்டர் மேல் 500 மோட்டார் பம்புகள் பொருத்தப்பட்டு தயார் நிலையில் உள்ளன. இதன் மூலம் மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீர் அகற்றும் பணிகள் நடந்து வருகிறது.

சென்னை மாநகராட்சி தொடர்பான புகார்களை 1913 என்ற எண்ணிற்கும், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் தொடர்பான புகார்களை 1916 என்ற உதவி எண்ணிற்கும் 24 மணி நேரமும் கட்டணமில்லாமல் தெரிவித்து தேவையான உதவிகளைப் பெறும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள குரு ஞானசம்பந்தர் மெட்ரிக் பள்ளி வளாகத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாமில் மாவட்டக் கழகச் செயலாளரும்,சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மாவட்ட ஆட்சியர் எஸ்.ஸ்ரீகாந்த், ஆகியோர் தொடங்கி வைத்து, கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தை வழங்கினார்கள். உடன் எஸ். ராஜ்குமார், நகர்மன்ற தலைவர் த.சிந்தாமணி (ஏ) என்.செல்வராஜ், நகர்மன்ற துணை தலைவர் த.சிவக்குமார் ஆகியோர் உள்ளனர்.

## தஞ்சை தெற்கு மாவட்டம்

# சேதுபாவாசத்திரம் கிழக்கு, சேதுபாவாசத்திரம் தெற்கு, சேதுபாவாசத்திரம் மேற்கு, சேதுபாவாசத்திரம் வடக்கு பேராவூரணி தெற்கு, பேராவூரணி மத்திய, பேராவூரணி வடக்கு, மதுக்கூர் கிழக்கு, மதுக்கூர் தெற்கு, மதுக்கூர் வடக்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் !

## ஒன்றிய பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் தஞ்சை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட, சேதுபாவாசத்திரம் வடக்கு, சேதுபாவாசத்திரம் தெற்கு ஆகிய இரண்டு ஒன்றியங்கள், **சேதுபாவாசத்திரம் கிழக்கு, சேதுபாவாசத்திரம் தெற்கு, சேது பாவாசத்திரம் மேற்கு, சேதுபாவாசத்திரம் வடக்கு** ஆகிய 4 ஒன்றியக் கழகங்களாகவும் பேராவூரணி வடக்கு, பேராவூரணி தெற்கு ஆகிய இரண்டு ஒன்றியங்கள், **பேராவூரணி தெற்கு, பேராவூரணி மத்திய, பேராவூரணி வடக்கு** ஆகிய மூன்று ஒன்றியக் கழகங்களாகவும் மதுக்கூர் கிழக்கு, மதுக்கூர் மேற்கு ஆகிய இரண்டு ஒன்றியங்கள் **மதுக்கூர் கிழக்கு, மதுக்கூர் தெற்கு, மதுக்கூர் வடக்கு** ஆகிய மூன்று ஒன்றியங்களாகவும் பிரிக்கப்படுகிறது. அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்களுக்கு பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **சேதுபாவாசத்திரம் கிழக்கு, சேதுபாவாசத்திரம் தெற்கு, சேதுபாவாசத்திரம் மேற்கு, சேதுபாவாசத்திரம் வடக்கு பேராவூரணி தெற்கு, பேராவூரணி மத்திய, பேராவூரணி வடக்கு, மதுக்கூர் கிழக்கு, மதுக்கூர் தெற்கு, மதுக்கூர் வடக்கு** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் பேரூர் கொண்டதாக அமையும்.

**சேதுபாவாசத்திரம் கிழக்கு ஒன்றியம்** : 1.ஊமத்தநாடு, 2.கழனிவாசல், 3.குப்பத்தேவன், 4.செந்தலைவயல், 5.சோலைக்காடு, 6.நாடியம், 7.மரக்காவலசை, 8.ராவுத்தன்வயல் (சம்பைபட்டினம்), 9.விளங்குளம் ஆகிய 9 ஊராட்சிகள்.

**சேதுபாவாசத்திரம் தெற்கு ஒன்றியம்** : 1.கங்காதரபுரம், 2.கரம்பக்காடு, 3.குருவிக்கரம்பை, 4.கொள்ளுக்காடு, 5.சரபேந்திரராஜன்பட்டினம், 6.சேதுபாவாசத்திரம், 7.புதுப்பட்டினம், 8.மருங்கப்பள்ளம், 9.முடச்சிக்காடு, 10.வத்தலைக்காடு, 11.வீரியங்கோட்டை ஆகிய 11 ஊராட்சிகள்.

**சேதுபாவாசத்திரம் மேற்கு ஒன்றியம்** : 1.அடைக்கத்தேவன், 2.கொளக்குடி, 3.செம்பியன்மாதேவிபட்டினம், 4.திருவதேவன், 5.மணக்காடு, 6.முதுகாடு, 7.ருத்திரசிந்தாமணி, 8.ரெட்டவயல் ஆகிய 8 ஊராட்சிகள் மற்றும் பெருமகளூர் பேரூர்.

**சேதுபாவாசத்திரம் வடக்கு ஒன்றியம்** : 1.அழகியநாயகிபுரம், 2.ஆண்டிக்காடு, 3.இரண்டாம்புளிக்காடு, 4.கட்டையங்காடுஉக்கடை, 5.செருபாலக்காடு, 6.சொக்கநாதபுரம், 7.பள்ளத்தூர், 8.புக்கரம்பை, 9.பூவானம் ஆகிய 9 ஊராட்சிகள்.

**பேராவூரணி தெற்கு ஒன்றியம்** : 1.அம்மையாண்டி, 2.காலகம், 3.செங்கமங்கலம், 4.சொர்ணக்காடு, 5.தென்னங்குடி, 6.பழையநகரம், 7.பின்னவாசல், 8.பெரியநாயகிபுரம் (ஆவணம்), 9.பைங்கால், 10.மாவடுகுறிச்சி, 11.வலப்பிரமன்காடு ஆகிய 11 ஊராட்சிகள் மற்றும் பேராவூரணி பேரூர்.

**பேராவூரணி மத்திய ஒன்றியம்** : 1.ஒட்டங்காடு, 2.கல்லூரணிகாடு, 3.களத்தூர், 4.செருவாவிடுதி தெற்கு, 5.செருவாவிடுதிவடக்கு, 6.திருச்சிற்றம்பலம், 7.துறவிக்காடு, 8.பாலத்தளி, 9.புனல்வாசல், 10.மடத்திக்காடு அகிய 10 ஊராட்சிகள்.

**பேராவூரணி வடக்கு ஒன்றியம்** : 1.அலிவலம், 2.இடையாத்தி, 3.கழுகப்புலிக்காடு, 4.குறிச்சி, 5.கொண்டிகுளம், 6.நடுவிக்கோட்டை, 7.நம்பிவயல், 8.பண்ணவயல், 9.பூவாளூர், 10.வாட்டாதிக்கோட்டை ஆகிய 10 ஊராட்சிகள்.

**மதுக்கூர் கிழக்கு ஒன்றியம்** : 1.அத்திவெட்டி, 2.இளங்காடு, 3.கல்யாணஓடை, 4.கன்னியாக்குறிச்சி, 5.காடந்தங்குடி, 6.காரப்பங்காடு, 7.சிரமேல்குடி, 8.சொக்கனாவூர், 9.பழவேரிக்காடு, 10.பாவாஜிக்கோட்டை, 11.புளியக்குடி, 12.பெரியக்கோட்டை, 13.மதுரபாஷாணிபுரம் ஆகிய 13 ஊராட்சிகள்.

**மதுக்கூர் தெற்கு ஒன்றியம்** : 1.ஆலம்பள்ளம், 2.காசாங்காடு, 3.தளிக்கோட்டை, 4.மன்னங்காடு, 5.மூத்தாக்குறிச்சி, 6.வாட்டாகுடிஉக்கடை, 7.வாட்டாகுடிவடக்கு, 8.விக்ரமம், 9.வேப்பங்குளம் ஆகிய 9 ஊராட்சிகள் மற்றும் மதுக்கூர் பேரூர்.

**மதுக்கூர் வடக்கு ஒன்றியம்** : 1.அண்டமி, 2.ஆலத்தூர், 3.ஆவிக்கோட்டை, 4.ஓலையக்குன்னம், 5.கருப்பூர், 6.கீழக்குறிச்சி, 7.சிராங்குடி, 8.நெம்மேலி, 9.புலவஞ்சி, 10.மதுக்கூர் வடக்கு, 11.மோகூர் ஆகிய 11 ஊராட்சிகள்.

### ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

மேற்கண்டவாறு அமையப் பெற்ற **சேதுபாவாசத்திரம் கிழக்கு, சேதுபாவாசத்திரம் தெற்கு, சேதுபாவாசத்திரம் மேற்கு, சேதுபாவாசத்திரம் வடக்கு பேராவூரணி தெற்கு, பேராவூரணி மத்திய, பேராவூரணி வடக்கு, மதுக்கூர் கிழக்கு, மதுக்கூர் தெற்கு, மதுக்கூர் வடக்கு** ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**சேதுபாவாசத்திரம் கிழக்கு ஒன்றியம்**
பொறுப்பாளர் : **வை.ரவிச்சந்திரன்**
சேதுபாவாசத்திரம், தஞ்சாவூர் மாவட்டம்.

**சேதுபாவாசத்திரம் தெற்கு ஒன்றியம்**
பொறுப்பாளர் : **மு.கி.முத்துமாணிக்கம்,**
சேதுபாவாசத்திரம். தஞ்சாவூர் மாவட்டம்.

**சேதுபாவாசத்திரம் மேற்கு ஒன்றியம்**
பொறுப்பாளர் : **செ. அருள்நம்பி**
சேதுபாவாசத்திரம், தஞ்சாவூர் மாவட்டம்.

**சேதுபாவாசத்திரம் வடக்கு ஒன்றியம்**
பொறுப்பாளர் : **செ. ஞானப்பிரகாசம்**
சேதுபாவாசத்திரம், தஞ்சாவூர் மாவட்டம்.

**பேராவூரணி தெற்கு ஒன்றியம்**
பொறுப்பாளர் : **க. அன்பழகன்**
புது ரோடு, பேராவூரணி, தஞ்சாவூர் மாவட்டம்.

**பேராவூரணி மத்திய ஒன்றியம்**
பொறுப்பாளர் : **கோ. இளங்கோவன்**
பேராவூரணி, தஞ்சாவூர் மாவட்டம்.

**பேராவூரணி வடக்கு ஒன்றியம்**
பொறுப்பாளர் : **ஆர். பன்னீர்செல்வம்**
பேராவூரணி, தஞ்சாவூர் மாவட்டம்.

**மதுக்கூர் கிழக்கு ஒன்றியம்**
பொறுப்பாளர் : **ஆர். இளங்கோ,**
மதுக்கூர், தஞ்சாவூர் மாவட்டம்.

**மதுக்கூர் தெற்கு ஒன்றியம்**
பொறுப்பாளர் : **எம்.எ.டி. மெய்யநாதன்**
மதுக்கூர், தஞ்சாவூர் மாவட்டம்.

**மதுக்கூர் வடக்கு ஒன்றியம்**
பொறுப்பாளர் : **வி. கோவிந்தராஜ்**
மதுக்கூர், தஞ்சாவூர் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 25-10-2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.


நினைவை விட்டு நீங்கா எங்கள் நெஞ்சத்திற்கு

13-ம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
05.09.1939

நினைவு
27.10.2012

A.L.சுப்பிரமணியன்
B.Sc.,B.L.,Ex. M.L.A,Ex.Mayor

தி.மு.கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்
செயலர், திருநெல்வேலி கல்வி சங்கம் ம.தி.தா.இந்துக்கல்லூரி மற்றும் மேல்நிலைப்பள்ளி
E.X.தலைவர் திருநெல்வேலி வழக்கறிஞர் சங்கம்.

A.L.S.லெட்சுமணன் A.L.S.சண்முகம்
தலைமை செயற்குழு உறுப்பினர்,
முன்னாள் மாநகர செயலாளர்,
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், திருநெல்வேலி.